**CC.No.285/2019**

**P.W.2**

| | | |
|---|---|---|
| திருமதி. லெட்சுமி | க/பெ. கிருஷ்ணமூர்த்தி | Date: 03.11.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(All Accused present)**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

1) 1 வது சாட்சி எனது மகன். 3 வது சாட்சி எனது அக்கா.4 வது சாட்சி மகேஷ் எனது உறவினர். கன்னியப்பன், சுடலை,சுப்பையா எனது உறவினர்கள். எதிரி நாராயணன் எனது உறவினர். சம்பவம் நடந்ததாக சொல்லும் சுடலைமுத்து எனது உறவினர். அவர் எனக்கு அண்ணன் முறை. சம்பவ நடந்ததாக சொல்லும் சுடலைமுத்து வீடு வள்ளியூரிலிருந்து திருச்செந்தூர் மெயின் ரோட்டில் உள்ளது. போக்குவரத்து அதிகம் உள்ள ரோடு. அந்த ரோட்டில் நிறைய கடைகள் உள்ளது. பாரதி தெரு திருச்செந்தூர் மெயின் ரோட்டில் இருந்து திரும்பி தெற்கு பக்கமாக செல்லும் சாலையில் உள்ளது. எனது வீடு பாரதி தெருவில் 3 வது வீடாக உள்ளது.

2) திருச்செந்தூர் திருப்பத்தில் இருந்து எனது வீடு சுமார் 30 அடி தொலைவில் உள்ளது. 1 வது எதிரியின் தந்தை எனது மகன் மீது வள்ளியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. அன்றைய தினமே புகார் கொடுத்தார் என்றாலும், காவல் நிலையத்தில் இருதரப்பினரும் சமரசம் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. சம்பவதன்று நான் வள்ளியூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன்.

3) எனது உறவினர் கன்னியப்பன் வரும் போது எனது மகன் மருத்துவமனையில் சிசிட்சையில் இருந்தார். நான் புகார் கொடுக்கும் போது போலீசாரிடம் இரண்டு கையெழுத்துக்கள் செய்தேனா என்று ஞாபகமில்லை. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எனது மகன் தான் எதிரிகளை அவமான படுத்தி பேசி மிரட்டினார் என்றாலும், அவர்கள்

கொடுத்த புகாரிலிருந்து தப்பிக்க வேண்டி பொய் புகார் கொடுத்தோம் என்றாலும் சரியல்ல.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH

Digitally signed by MOSES JEBASINGH
Date: 2025.11.03 18:05:49 +0530

Judicial Magistrate,
Valliyoor.